## இன்றுள்ள அரசியல் சூழ்நிலையில் சர்வாதிகார அரசு அமையக்கூடிய சாத்தியம்

பாராளுமன்றத் தொடர் நொவம்பர் 16ந் திகதிவரை ஒத்திவைக்கப்பட்டுள்ளது. புதிய பிரதமரை நியமித்தது சரியா இல்லையா என்பதை அரசியல் அமைப்பு யாப்பினையும் 19வது திருத்தச்சட்டத்தையும் உயர் நீதிமன்றம்தான் சீர்தூக்கி ஆராயந்து தீர்மானிக்க வேண்டும். பழைய பிரதமருக்கா அல்லது புதிய பிரதமருக்கா பாராளுமன்றத்தில் கூடிய ஆதரவுண்டு என்பது 16ந் திகதியே தெரியவரும். அதற்கு முன்னர் இரு பகுதியினரும் தங்களுக்குள்ள ஆதரவை பிரதிநிதிகளின் எண்ணிக்கையில் நிலைநாட்ட முயற்சியில் ஈடுபடுவார்கள். தமிழ் தேசியக் கூட்டமைப்பின் ஆதரவு கிடைப்பவர்கள் கூடிய எண்ணிக்கையை பெறுவார்கள்.

அதற்கு முன்னர் ஐ.தே.கட்சி உயர் நீதிமன்றத்தில் நீதியை பெறுவதற்கு நாடிவிடுவார்கள். சனாதிபதி தனது உயிருக்கு அச்சுறுத்தல் என்பதற்காக ஆட்சி மாற்றத்தை கொண்டு வரமுடியாது. அச்சுறுத்தல் ஏற்படுத்தியிருந்தவர்களுக்கு எதிராக நடவடிக்கை எடுக்கப்பட வேண்டிய தேவையே இருந்தது.

தேசிய அரசின் ஆட்சியில் இருந்தவர்களில் ஒரு பகுதியினர் விலகி நீங்கியதால் அமைச்சரவை தானாக கலைந்துவிடும் என்பது ஏற்கக்கூடிய விவாதமல்ல. இரு கட்சிகளும் தொகுதி வாரியாக விட்டுக்கொடுத்து பங்கீடு செய்து பாராளுமன்றத் தேர்தலில் ஒரே அணியில் நின்றவர்களல்ல. தனித்துப் போட்டியிட்டு வென்றவர்கள். ஐ.தே.கட்சியின் ஆட்சி பிரதமரையும் அமைச்சரவையையும் கொண்டதாக நடைபெற்றுக் கொண்டிருக்கும் வேளையிலேயே சுதந்திரக் கட்சியினருடன் பேச்சுவார்த்தையில் ஈடுபட்டு அவர்களின் இணக்கப்பாட்டுடன் தேசிய அரசு ஆரம்பிக்கப்பட்டது. இணங்கிய சுதந்திரக் கட்சியினர் வெளியேறினால் முன்னிருந்த நிலைமையாக ஐ.தே.கட்சியின் ஆட்சி தொடர்ந்திருக்க வேண்டும். இதுதான் நடந்திருக்க வேண்டிய நிலைமை.

தேவையானால் முன்னர் நடந்தது போன்று பிரதமருக்கு எதிராக நம்பிக்கையில்லாப் பிரேரணை கொண்டுவந்து நிறைவேற்றியிருக்கலாம். அல்லது சனாதிபதி ஐ.தே.கட்சி ஆட்சியை கொண்டு நடாத்த பொரும்பான்மை உள்ளதா என நிரூபிக்கும்படி ஐ.தே.கட்சியை கேட்டிருக்கலாம். நிருபிக்க முடியாதபோது மற்றக் கட்சியினை ஆட்சி

அமைத்து பெரும்பான்மையை நிரூபிக்கும்படி கோரியிருக்கலாம். இவ்வாறான சட்டரீதியான செயற்பாடுகள் நடைபெறவில்லை.

இவ்வாறு அரசியல் அமைப்பு சட்ட நடைமுறைகளைப் பின்பற்றாத காரணங்களினால் உயர் நீதிமன்ற தீர்ப்பினாலும் த.தே.கூட்டமைப்பு ஐ.தே.க.வை ஆதரித்தாலும் ஆட்சி மாற்றம் தடைப்பட்டுவிடும்.

இரு பெரும் முஸ்லீம் கட்சிகளும் மனோ கணேசனின் மக்கள் முற்போக்கு கூட்டணியும் ஐ.தே.க.வை ஆதரித்து அறிக்கை விடுத்துள்ளார்கள். இந்த நிலையில் த.தே.கூட்மைப்பும் ஆதரித்தால் புதிய பிரதமர் நியமனம் செல்லாதாகிவிடும். புதிய பிரதமருக்கு ஆதரவாக தமிழர்களில் ஆறுமுகம் தொண்டமான் கட்சியும் (02) டக்ளஸ் தேவானந்தாவும் மட்டும்தான் இருக்கிறார்கள். **இந்த நிலைமையில் இனவாதம் மதவாதம் மீண்டும் தலைதூக்க சாத்தியமுள்ளது.**

ஏற்கெனவே புதிய பிரதமர் அணியைச் சேர்ந்த பலருக்கு எதிராக பல முறைப்பாடுகள் சி.ஐ.டி. விசாரணயிலும் ஊழலை விசாரிக்கும் ஆணைக்குழு விசாரணையிலும் நீதிமன்ற விசாரணைகளிலுமுள்ளன. அதனால் நீதிமன்றத்தின் தீர்ப்பினாலோ அல்லது பாராளுமன்ற பெரும்பான்மையின்மையாலோ புதிய அரசு வீழ்ச்சி காணக்கூடிய சாத்தியமுள்ளது. அதனால் தங்களுக்கெதிராகவுள்ள குற்றச்சாட்டுக்களிலிருந்து தங்களைப் பாதுகாப்பதற்காக ஆட்சியை தொடர ஒரே வழி சர்வாதிகார ஆட்சியை பிரகடனப்படுத்துவது ஒன்றே என ஊகிக்க முடியும். அவ்வாறு நடந்தால் இப்பிச்சினை சர்வதேசப் பிரச்சினையாக உருவெடுக்கும் சாத்திய சூழ்நிலை ஏற்படலாம். சர்வதேச மட்டத்தில் சீனாவைவிட வேறு எந்த நாடும் புதிய பிரதமருக்கு வாழ்த்துக்களை தெரிவிக்கவில்லை என்பதுடன் முக்கிய நாடுகள் அரசியலமைப்பின்படி ஒழுகி சனநாயகத்தை பாதுகாக்கும்படி சனாதிபதியை கேட்டுள்ளன.